# பத்திரிக்கை செய்தி

செங்கல்பட்டு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிற்கு தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய காவலாளி (Watchman) பணியிடம் நிரப்பப்பட உள்ளதால், அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| பணியின் பெயர் | : | காவலாளி (Watchman) |
| கல்வித்தகுதி | : | 8 ஆம் வகுப்பு தேர்ச்சி |
| அனுபவம் | : | வேலை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| வயது | : | 21 முதல் 42 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் |
| ஊதியம் | : | ரூ.548/- (நாள் ஒன்றுக்கு) |

மேற்கண்ட பணியிடம் மிஷன் வாத்சல்யா வழிகாட்டுதலின்படி, தினக்கூலி அடிப்படையிலான பணியிடமாகும். இது மத்திய, மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் ஆகையால் இதனை அடிப்படையாகக் கொண்டு எவ்விதத்திலும் அரசுப் பணி கோர இயலாது. மேலும் மேற்கண்ட பணியிடத்திற்கு செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பத்துடன் உரிய கல்விச்சான்று, குடும்ப அட்டை, ஆதார் அட்டை, அனுபவச்சான்று நகல்கள் மற்றும் புகைப்படத்துடன் 11.08.2026 ஆம் தேதி மாலை 05.45-க்குள் மாவட்ட குழsந்தைகள் பாதுகாப்பு அலகு, அறை எண். F0-06, F-பிளாக், தரைத்தளம். மாவட்ட ஆட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் – 603 111 என்ற அலுவலக முகவரிக்கு வந்து சேர வேண்டும். விண்ணப்பங்களை http://chengalpattu.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சியர் / தலைவர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
செங்கல்பட்டு.